## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 3-8 - முடியானே
## (கரணங்களும் தாமும் பெருவிடாய்ப்பட்டுப் பேசுதல்)

2974 * முடியானே! * மூவுலகும் தொழுதேத்தும் சீர்
அடியானே! * ஆழ்கடலைக் கடைந்தாய்! * புள்ளூர்
கொடியானே! ** கொண்டல் வண்ணா! * அண்டத்து உம்பரில்
நெடியானே! * என்று கிடக்கும் என் நெஞ்சமே 1

2975 நெஞ்சமே! நீள்நகராக * இருந்த என்
தஞ்சனே! * தண்ணிலங்கைக்கு[1] இறையைச் செற்ற
நஞ்சனே! ** ஞாலம் கொள்வான் * குறளாகிய
வஞ்சனே! * என்னும் எப்போதும் என் வாசகமே 2

2976 வாசகமே ஏத்த அருள் செய்யும் * வானவர் தம்
நாயகனே! * நாள் இளந்திங்களைக் கோள் விடுத்து **
வேயகம் பால் வெண்ணெய் தொடுவுண்ட * ஆனாயர்
தாயவனே! * என்று தடவும் என் கைகளே 3

2977 கைகளால் ஆரத் * தொழுது தொழுது உன்னை *
வைகலும் மாத்திரைப் போதும் * ஓர் வீடின்றி **
பைகொள் பாம்பேறி * உறை பரனே! * உன்னை
மெய்கொள்ளக் காண * விரும்பும் என் கண்களே 4

2978 கண்களால் காண * வருங்கொல்? என்று ஆசையால் *
மண் கொண்ட வாமனன் * ஏற மகிழ்ந்து செல் **
பண் கொண்ட புள்ளின் * சிறகொலி பாவித்து *
திண் கொள்ள ஓர்க்கும் * கிடந்து என் செவிகளே 5

2979 செவிகளால் ஆர * நின் கீர்த்திக் கனி என்னும்
கவிகளே * காலப் பண் தேன் * உறைப்பத்துற்று **
புவியின் மேல் * பொன்னெடும் சக்கரத்து உன்னையே *
அவிவின்றி ஆதரிக்கும் * எனதாவியே 6

2980 ஆவியே! ஆரமுதே! * என்னை ஆளுடை *
தூவியம் புள்ளுடையாய்! * சுடர் நேமியாய்! **
பாவியேன் நெஞ்சம் * புலம்பப் பலகாலும் *
கூவியும் காணப் பெறேன் * உன கோலமே 7

2981 கோலமே! தாமரைக் கண்ணதோர் * அஞ்சன
நீலமே! * நின்று எனதாவியை * ஈர்கின்ற

[1] தென்னிலங்கைக்கு

சீலமே! ** சென்று செல்லாதன * முன்னிலாம்
காலமே! * உன்னை எந்நாள் * கண்டு கொள்வனே? 8

2982 கொள்வன் நான் மாவலி! * மூவடி தா என்ற
கள்வனே! * கஞ்சனை வஞ்சித்து * வாணனை
உள்வன்மை தீர ** ஓராயிரம் தோள் துணித்த *
புள்வல்லாய்! * உன்னை எஞ்ஞான்று பொருந்துவனே? 9

2983 பொருந்திய மாமருதினிடை போய * எம்
பெருந்தகாய்! * உன் கழல் காணிய பேதுற்று **
வருந்தி நான் * வாசக மாலை கொண்டு * உன்னையே
இருந்திருந்து * எத்தனை காலம் புலம்புவனே? 10

2984 * புலம்பு சீர்ப் * பூமி அளந்த பெருமானை *
நலங்கொள் சீர் * நன்குருகூர்ச் சடகோபன் ** சொல்
வலம் கொண்ட ஆயிரத்துள் * இவையும் ஓர் பத்து
இலங்குவான் * யாவரும் ஏறுவர் சொன்னாலே 11

**அடிவரவு:** முடியான் நெஞ்சம் வாசகம் கைகள் கண்கள் செவிகள் ஆவியே
கோலமே கொள்வன் பொருந்தி புலம்பு சொன்னால்